வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March- 2018

| தரம் :- 13 (2018) | கிறிஸ்தவ நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 11) 2 | 21) 3 | 31) 3 | 41) 3 |
| 2) 5 | 12) 4 | 22) 5 | 32) 3 | 42) 3 |
| 3) 5 | 13) 3 | 23) 4 | 33) 5 | 43) 2 |
| 4) 1 | 14) 2 | 24) 2 | 34) 1 | 44) 4 |
| 5) 2 | 15) 2 | 25) 5 | 35) 5 | 45) 4 |
| 6) 1 | 16) 5 | 26) 4 | 36) 1 | 46) 1 |
| 7) 3 | 17) 3 | 27) 3 | 37) 2 | 47) 3 |
| 8) 2 | 18) 5 | 28) 1 | 38) 4 | 48) 2 |
| 9) 3 | 19) 2 | 29) 2 | 39) 5 | 49) 2 |
| 10) 3 | 20) 4 | 30) 4 | 40) 1 | 50) 5 |

**(2X50=100 புள்ளிகள்)**

### பகுதி I

agaram.lk

01. 1)

- சட்டம் நீதி நிர்வாகம் சிறப்புற்றிருந்தது.
- உரோமை நகரங்களெல்லாம் வீதிகள் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து சிறப்புற்றிருந்தது.
- உரோமைப் பேரரசின் கீழ் எங்கும் அமைதி நிலவியது.
- எல்லா நாடுகளும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தமை
- எங்கும் கிரேக்க மொழி பேசப்பட்டமை

2)

- எருசலேமில் அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட வேண்டும்
- ஒரு யூதன் தன் மதத்திற்கு எதிராக குற்றம் இழைத்தால் அவனுக்கு
- நீதித்தீர்ப்பு வழங்குவதற்காக இச்சங்கம் கூட்டப்படலாம்
- குற்றவாளியாக கருதப்பட்ட நபருக்கு எதிராக இரண்டு சாட்சிகள் தனித்தனியே விசாரணை செய்யப்படல் வேண்டும் சாட்சியம் ஒரே மாதிரியாக இருத்தல்.
- குற்றவாளிகள் முறையாக விசாரிக்கப்பட்டு விடுதலைத் தீர்ப்பாயின் அன்றைய நாளிலும் மரண தண்டனையாயின் இரு நாட்களுக்கு பின்னரே நிறைவேற்றப்படல் வேண்டும்.

(4 புள்ளிகள்)

3) யோசுவா, தெபோரா, கெதயோன், சாம்சோன் (4 புள்ளி)

4) சவுல், தாவீது, சாலமோன், ரெகபேயாம், எரோபவாம் (4 புள்ளி)

5) செபத்திற்கு முதலிடம் கொடுத்தல்

- கீழ்ப்படிதல்
- ஏழ்மை நிலை
- உழைத்து வேலை செய்தல்
- தரவேறுபாடு இன்மை (4 புள்ளி)

(4X5=20புள்ளிகள்)

02. 1) மீண்டும் மீண்டும் சொல்லிக் கொடுத்தல், ஞானகீத இசைப்பின் மூலம் யாவற்றையும் அறிவுறுத்தல், நாடகங்கள், கட்புலன் செவிப்புலன் ஆகிய முறைகளும் கையாளப்பட்டன. வினாவிடை முறை கையாளப்பட்டன.

- மதம் சார்ந்த கல்வி முறையே முதலிடம் வகித்தது
- இவர்கள் காலத்து கல்வி முறையின் பிரதான அம்சம் கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்வது.
- சுதேச மொழி சுதேச மரபுகள் பயன்படுத்தப்பட்டன
- இயேசு சபையினரே இலங்கையில் நாடகத்தின் வழியாக கல்வி கற்கும் முறையை அறிமுகப்படுத்தினர். (4 புள்ளி)

2)

- கோயில் பற்று பாடசாலைகள்
- செமினேரிகள்
- ஒல்லாந்தப் பாடசாலைகள்
- அனாதை இல்லங்கள் (4 புள்ளி)

3)

- அன்பின் கன்னியர் சபையினர்
- நல்லாயன் கன்னியர் சபையினர்
- திருக்குடும்ப கன்னியர் சபையினர்
- பிரான்சிஸ்கன் சபை சகோதரிகள் (4 புள்ளி)

4)

- கத்தோலிக்கரின் விகிதாசாரத்திற்கேற்ப, பாடசாலைகள் அதிகரிக்கப்படவில்லை
- உயர் கல்லூரிகள் மூன்றே மூன்று மாத்திரம் இருந்தன.
- பாடசாலைகள் எல்லாம் சமயக்கலையை மையமாக்கிக் கொண்டே இயங்கின
- கீழ் மட்டத்தாருக்கும் உயர்மட்டத்தாருக்கும் பாடசாலைகள் இருந்தன.
- இடைநிலையினருக்கான பாடசாலைகள் இருக்கவில்லை (4 புள்ளி)

5) நன்மைகள்

- பெற்றோர் விழிப்புணர்வுடன் பிள்ளைகளின் கல்வி அறிவுமட்டில் அக்கறை காட்டினர்.
- தேசிய மறைக்கல்வி நடு நிலையம், மறைமாவட்ட மறைகல்வி நடு நிலையம் நிறுவப்பட்டது.
- பங்கு மட்டத்தில் மறைப்பாடசாலைகள் பெரிதும் வளர்ச்சியடையலாயிற்று.

agaram.lk

**தீமைகள் :-**

- கத்தோலிக்க பாடசாலைகளில் கத்தோலிக்க மாணவருக்கு மறையறிவு மறுக்கப்பட்டது.
- கத்தோலிக்க பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர், கத்தோலிக்க அதிபர் இல்லாத நிலை உருவாகலாயிற்று
- கத்தோலிக்க மறைப்பரப்பாளரிடமிருந்து சொத்துகள் அரச உடைமையாக்கப்பட்டது.

(4 புள்ளி)

*03. 1)*

- அறிவியல் வளர்ச்சிக்கும், பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் வித்திட்டது கிரேக்க நாகரிகமாகும்.
- அரசியல், மெய்யியல், தாக்கம், புவியியல், வானியியல், கணிதம், கேத்திர கணிதம் இலக்கியம், கலை, மருத்துவம், விளையாட்டு போன்றவற்றுக்கு பங்களிப்புச் செய்துள்ளது.
- தனிமனித ஆற்றலை வளர்ப்பதிலும், உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள், திறமையாக செயப்பட்டோரை கௌரவிக்கும் முறைமை.
- இராணுவ பயிற்சி செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- பகுத்தறிவின் அடிப்படையில் விடயங்களைப் புரிந்து முடிவுகளை எடுக்கும் முறை

(4 புள்ளி)

*2)*

- நேரான அமைப்பைவிட வளைந்த உறுதியான அமைப்பைக் கொண்டது
- தட்டையான கூரையைவிட அரைவட்ட முகப்பு அமைக்கப்பட்டது
- பூரண ஒளியை விட மங்கலான ஒளியைப்பயன்படுத்தினர்
- ஆலயத்தின் மத்திய பகுதி முழுவதிலும் தூணோ அல்லது சாய்தளமோ இல்லை (4 புள்ளி)

*3)*

- யாழ்ப்பாண வைபமாலை ஊற்றுக்கள்
- யாழ் அரசனின் மறந்த காசுகள்
- போர்த்துக்கேய கால அரசர்கள்
- யாழ்ப்பாண வைபவ விமோசனம்

*4)*

- உபாதன காரணி உ+ம் சிலை – மாபில் காரணம் (மாபில் உபாதன காரணம்)
- உத்தியல்பு காரணி உ+ம் சிற்பின் சிந்தனையில் இருக்கும் வடிவம்
- நிமித்த காரணி உ+ம் சிலையை தோற்றுவிக்கக் காரணமான சிற்பி
- முடிவுக்காரணி உ+ம் ஒரு செயற்பாடு என்ன காரணத்திற்காக செய்யப்படுகின்றதோ அதுவே முடிவுக்காரணி

*5)*

- லியோனாடோ டா வின்சி - இறுதி இராவுணவு, மொனாலிசா ஓவியம்
- மைக்கல் ஆஞ்சலோ – உலகப்படைப்பு, நடுத்தீர்வை.

agaram.lk

## பகுதி II

04. 1) எபே 5:22–30

- ஆண்டவருக்கு பணிந்திருப்பது போல உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள்.
- கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பது போல கணவர் மனைவிக்குத் தலையாயிருக்கிறார்.
- கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள்
- கணவன் மனைவிமேல் கொள்ளும் அன்பு ஒரு போதும் முறிக்க முடியாத அன்பு
- பிள்ளைகளே பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள்
- பெற்றோரே உங்கள் பிள்ளைகளை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்து திருத்தி அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள். (5 புள்ளி)

2) 1 கொரி 8'9–13, எபேசியர் 4:2–3

- இந்த ஒற்றுமைக்கு அடிப்படைக் காரணம் எல்லோருக்கும் ஒரே எதிர் நோக்கு, ஒரே உடல், ஒரே ஆவி, ஒரே ஆண்டவர் ஒரே நம்பிக்கை ஒரே திருமுழுக்கு, ஒரே கடவுள், ஒரே தந்தை. (5 புள்ளி)

3) பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகின்றது.

- ஞானம் நிறைந்த சொல்வளம்
- அறிவு செறிந்த சொல்வளம்
- நம்பிக்கை
- பிணி தீர்க்கும் அருட்கொடை
- வல்ல செயல் செய்யும் ஆற்றல்
- இறைவாக்கு உரைக்கும் ஆற்றல்
- ஆவிக்குரியவற்றைப் பகுத்தறியும் ஆற்றல்
- பல்வகை பரவசப் பேச்சு பேசும் ஆற்றல்
- பிறிதொருவருக்கு அப் பேச்சை விளக்கும் ஆற்றல் (5 புள்ளி)

4)

- மனுவுருவில் வெறுமையாதல்:-

  “தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்.”அவர் மனுஷீகத்தை எடுப்பதற்காக தானாகவே விரும்பி தன்னுடைய தெய்வீகத்தை முற்று முழுவதும் வெறுமையாக்கினார். தனது உரிமை மகிமை ஆற்றல் அனைத்தையும் துறந்தார். பழைய ஆதாம் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விரும்பி பாவத்தைக் கட்டிக் கொண்டான். இங்கு புதிய ஆதாம் கடவுளாயிருந்தும் அந்த உரிமையை உதறித் தள்ளுகிறார்.

- ✦ **இறுதியான சிலுவை இழிவு :-**

  “சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்றும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்” சிலுவை மரணம் ஓர் அடிமைக்கு தன் உரிமைகள் அனைத்தையும் இழந்த ஒருவனுக்கே உரிய தண்டனை முறை அவமானத்தின் உச்சக்கட்டம். தாழ்மை, கீழ்ப்படிவு, சுயபரித்தியாகமே இயேசுவின் முக்கிய இலட்சணங்கள் என்றால் அவையே ஓர் கிறிஸ்தவனின் முக்கிய பண்புகளாக அமைய வேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். (5 புள்ளி)

(5X4=20புள்ளிகள்)

agaram.lk

05\. 1) 3ம் நூற்றாண்டு முதல் எகிப்தில் சிரியாவில் கிறிஸ்தவ உத்தமதன வாழ்வை விரும்பியவர்கள் காலப்போக்கில் வனத்துத்தந்தை என அழைக்கப்பட்டனர்.

- இவர்களில் முக்கியமானவர்கள் வனத்து அந்தோனியார், பக்கோமியுஸ் புனித பசில் ஆவர். (இவர்களைப்பற்றி சிறு விளக்கவுரை எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

2) ஆசிர்வாதப்பர் சபையினதும் குளுணி சபையினதும் துறவறசட்ட ஒழுங்குகளைப் பிழையின்றி முன்னெடுத்துச் செல்லும் குறிக்கோளுடன் சிஸ்டர்சியன் சபை உருவானது. (2 புள்ளி)

- பிரான்ஸ் அரசனுக்கு மறைதொடர்பில் எழுந்த பிரச்சினையைத் தேர்ந்து கொள்ள உதவுதல்.
- மக்கள் மத்தியில் சென்று அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையை தீர்த்து வைக்க உதவுதல்.
- ஐரோப்பாவில் தொழில்நுட்பம் பரவ உந்து சக்தியாக செயற்பட்டமை. (3 புள்ளி)

3) சிறுவர் கல்வியற்றோருக்கு திருமறையைப் போதித்தனர்.

- உயர்கல்வி நிறுவனங்களையும் பல்கலைக்கழகங்களையும் நிறுவி கத்தோலிக்க திருமறையை வளர்த்தனர்.
- சீர்திருத்த சபைகளின் சவால்களுக்கு முகங்கொடுக்க கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியை இயேசு சபையின் இளம் குருக்கள் முன்னெடுத்தனர்.
- திருதெந்தின் பொதுச்சங்க கோட்பாடுகளை உலகில் முன்னெடுத்துச் சென்றனர்.
- மறை தூதுப்பயணங்களை மேற்கொண்டு உலகின் பல நாடுகளில் கத்தோலிக்க திருச்சபைகளைப் பரப்பினர். (5 புள்ளி)

4) புனித ஆசிர்வாதப்பர் துறவற சபையினர் செபமும் வேலையும் எனும் கருத்தை தமது விருதுவாக்காகக் கொண்டனர். இவ்வாறாக துறவிகள் செயற்பட்டமை உடல் உழைப்பின் மேன்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது. துறவிகள் பெரும்பாலும் காடுகளை அழித்து அவற்றை சிறந்த விவசாய நிலங்களாக மாற்றியுள்ளனர்.

- துறவிகள் எல்லாத் தொழிலையும் சமமாகக் கருதினர். உதாரணம் கால்நடை வளத்தல். பால் கறத்தல், தேனீ வளர்த்தல், அறுவடை செய்தல். இவர்கள் ஐரோப்பாவில் விவசாய நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன் மாற்றுப் பயிர்ச் செய்கை போன்ற புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தினார். (5 புள்ளி)

(5X4=20புள்ளிகள்)

06\. 1) பாஸ்கா திருவிழா

- பெந்தக்கோஸ்தே திருவிழா
- புளியாத அப்ப விழா
- கூடார விழா
- பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்
- கோயில் அர்ப்பண விழா (2 புள்ளி)

(இவற்றுள் இரண்டு விளக்கி எழுதியிருப்பின் 3 புள்ளி வழங்கவும்.

(3+2=5புள்ளிகள்)

agaram.lk

2)

- உயர்குலத்தோர்
- நடுத்தர வர்க்கத்தினர்
- தாழ்த்தப்பட்டோர்.
  (மேற்குறிப்பிட்டவற்றை விளக்கி எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

3) இவர்கள் சமாரியாவில் இருந்த யூதர்களுடன் கலப்புத்திருமணம் செய்தனர். தமது இனத்தூய்மையை இழந்த காரணத்தால் இச் சந்ததியினரை யூதர்கள் இழிவாகக் கருதி ஒதுக்கினர். எனவே இவர்களும் தாழ்ந்த வகுப்பினர். இயேசுவின் காலத்தில் சமாரியா வழியாகப் பயணம் செய்வது கூட தவிர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுடன் உரையாடுவது கூட விலக்கப்பட்டிருந்தது. இயேசு யூதர்களின் பொருளற்ற சட்டத்தை உடைத்தெறிவதுடன் மனித மாண்பே தலையானது என்ற நற்செய்தியை தருகின்றார். (5 புள்ளி)

4) ஓய்வு நாளை 'சபாத்' என்று கூறுவர். ஓய்வு நாள் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை மாலை தொடங்கும் மூன்று விண்மீன்கள் வானத்தில் உதித்ததும் இரவு ஆரம்பம் என்ற போதனையின் படி முதல் விண்மீன் உதித்ததும் தொழுகைக்கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஓய்வு நாள் எக்காளம் ஊதப்படும்.

- இவ் ஒலியைக் கேட்டதும் எல்லோரும் விளக்கேற்றி அமைதியைக் கைக்கொள்வர். அன்றைய நாளில் சமையல் வேலை எதுவும் செய்ய மாட்டார்கள்.
- ஓய்வு நாளில் (39) முப்பத்தொன்பது வகையான அலுவல்கள் தடை செய்யப்பட்டிருந்தன.
- ஆனால் இயேசுக்கிறிஸ்து மனிதன் ஓய்வுநாளுக்கன்று ஓய்வு நாள் மனிதனுக்காகவே என்று கூறி மனிதாபிமானப் பணிகளை செய்து சபாத்தைவிட பிறரன்பு உயர்ந்தது எனக் காட்டினார்.

agaram.lk

07. 1) 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த கொஸ்மஸ் இன்டோப்லேடஸ் என்னும் எழுத்தாளர் தமது 'கிறிஸ்தவ சபைகளின் விபரணம்' எனும் நூலில் பாரசீக வியாபாரிகள் தப்ரபேன் என்றழைக்கப்பட்ட இலங்கைக்கு வருகை தந்து தங்கியிருந்தனர் என்றும்.

- அவர்கள் பாரசீக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர் என்றும்
- அவர்கள் பாரசீக திருவழிபாட்டை நடாத்துவதற்காக பாரசீக ஆயர் ஒருவரினதும் திருத்தொண்டர் ஒருவரினதும் பணியைப் பெற்றுக் கொண்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 1912ம் ஆண்டு அகழ்வாராய்ச்சிகளின்போது கண்டெடுக்கப்பட்ட நெஸ்டோரியன் சிலுவையும் ஆதாரத்துடன் உறுதி செய்கின்றன.
- கி.பி 5ம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து வருகை தந்த முதலாவது காசியப்பன் அரசனும் அதன் பின்னர் அரசனை முதலாவது முகலனின் கீழ் பணியாற்றிய கிறிஸ்தவ விசுவாசியாகிய மிகார் எனும் சேனாதிபதியைப் பற்றியும் மூலவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- புனித தோமா, புனித பார்தலோமியுஸ், புனித யூதாதேயு ஆகிய திருத்தூதர்கள் இலங்கையில் (தப்ரபேனில்) மறையை போதித்துள்ளனர்.
- கி.பி 9ம் நூற்றாண்டில் சிகிரியா கால அரசவையில் நான்கு கிறிஸ்தவ அமைச்சர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. (5 புள்ளி)

2) • கோவில்பற்று பாடசாலை நிறுவி அங்கு செபம் செய்தல், வினா விடை முறையிலான மறையறிவை சுதேச மொழியிலளித்தனர்.
கிறிஸ்தவ தோத்திரப்பாடல்கள் கற்பிக்கப்பட்டன.
எழுத்து வாசிப்பு இங்கு கற்பிக்கப்பட்டது.

- கல்லூரி முறை - இது ஓர் உயர்கல்வி நிறுவனம்
- ஐரோப்பிய குருத்துவக் கல்லூரிக்கு ஒத்ததாக அமைந்தது.
- இங்கு சமயம், வேதசட்டம், எழுத்து வாசிப்பு, எண்கணிதம், சங்கீதம் இலத்தீன், நற்பழக்க வழக்கங்கள் போதிக்கப்பட்டன.
- அரசர்களுக்கான கல்விக் கூடங்கள்
- போர்த்துக்கேயரால் சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது அடைக்கலம் புகுந்த கல்வி கற்க ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு அரச கல்வியை அறித்தனர். டொன்யுவான இராஜசிங்க மன்னன் ஆகியோர் இவர்களிடம் கல்வி கற்றனர்.

3) வர்த்தகத்தில் முன்னேற்றம் பொருளாதாரம், தானியங்கள் உற்பத்தியில் ஈடுபட்டதனால் இந்நாட்டின் பொருளாதாரம் உயிரூட்டப்பட்டது.

- வர்த்தக நடவடிக்கைகளுக்கான வழிகளை வகுத்தல். வாய்க்கால்கள் அருவிகளை உண்டாக்குதல்.
- உரோம ஒல்லாந்தச் சட்டம் இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிர்வாகச் செயற்பாடுகள் நல்ல முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததோடு கச்சேரிகள் ஆரம்பிக்கப்பட்டமையும் அதன் வழியாக பிரசைகளின் பிறப்பு திருமணம், மரணம் என்பவை பதியப்படுவதும் ஆரம்பிக்கப்பட்டது.
- கல்வி நடவடிக்கைகள் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமை.
- இச் சமயத்தின் போதனைகள் இந்நாட்டின் மக்கள் சமூகத்துடன் கலந்தது.
- அச்சியந்திரங்கள் இந்நாட்டில் அறிமுகம் செய்தல். (5 புள்ளி)

agaram.lk

4) இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர்களில் டொன்பீற்றர் அடிகள், ஆயர் எட்மன் பீரிஸ், பீற்றர்பிள்ளை அடிகள், தனி நாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவர்கள்.

- கல்வி நிர்வாகத்தில் நிர்வாகிகளாகவும், அதிபர்கள், ஆசிரியர்களாகவும் பெரும் எண்ணிக்கையான கிறிஸ்தவர்கள் பங்குபற்றினர்.
- குருக்கள், துறவிகள், கன்னியர்கள் பணிபுரிகின்றனர். இனமதபேதமின்றி கிறிஸ்தவ பாடசாலைகளில் ஏனைய சமய மாணவரும் கல்வி கற்கின்றனர்.
- இலங்கையில் ஆங்கிலக் கல்விப்போதனையில் திருச்சபை ஆற்றி வரும் பங்களிப்பு கணிசமானது.
- கல்வித்துறையில் ஒழுக்கம் பேணுவதில் கிறிஸ்தவ பாடசாலைகள் முன்னணி வகிக்கின்றன. (5 புள்ளி)

(5X4=20புள்ளிகள்)

08. 1) நோட்றே டேம் (Notre Dame) பேராலயத்தைச் சேர்ந்த பல கதீட்ரல் பாடசாலைகளை இணைத்து தோற்றம் பெற்றது.

- பரிஸ் ஆயர் இதனைப் பல்கலைக்கழகமாகப் பிரகடனப்படுத்தியதுடன் அங்கு பல நிலையங்களும் பீடங்களும் உருவாக்கப்பட்டன.

- *14ம் நூற்றாண்டில் இப் பல்கலைக்கழகம் நான்கு பீடங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை இறையியல்பீடம், மருத்துவப்பீடம், சட்டப்பீடம், கலைப்பீடம் ஆகியன.*
- *13ம் நூற்றாண்டில் இப் பல்கலைக்கழகத்திற்கு 40 தனியார் பாடசாலைகள் இணைந்திருந்தன.* *(5 புள்ளி)*

*2) அருட்பணி சார்டேன்.*

- *பூமியின் அமைப்பியல் பற்றியும், புதைந்து கிடக்கும் புராதன காலத்து மிருகம் அல்லது தாவரம், இவற்றின் மிஞ்சிய பகுதிகள் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்யும் ஓர் விஞ்ஞானியும், தத்துவ ஞானியும் கலிஞரும் ஆவார்.*
- *மனித வர்க்கத்தின் மண்டையோட்டைக் கண்டுபிடிக்கும் ஆராச்சியில் ஈடுபட்டார்.*
- *சார்டேன் கண்டறிந்தவாறு மனித குலத்தின் பரிணாமத்திற்கு விசேட திட்டமொன்றும், நோக்கமும் உள்ளதோடு அப் பரிமாணம் உயிர்பெறுவது வல்லமை ஒன்றினாலேயே அவ் வல்லமை அன்பு எனும் 'அகபே அன்பு' ஆகும். அன்பின் வல்லமைக்கு முழு உலகின் சகல வல்லமையையும் ஒன்றிணைக்கும் திறன் உள்ளது.*
- *கிரேக்க எழுத்துச் சுவடியின் இறுதி எழுத்தை உபயோகித்து 'ஒமேகா' கட்டமாக அதனை எடுத்துக்காட்டினார். 'ஒமேகா' கட்டத்தில் மனிதனுக்கு கிடைப்பது மனித குலத்தின் நிறைவு பெற்றவன இயேசுக்கிறிஸ்துவின் இயல்பு. முழு மனித குலமும் பரிணாமம் பெற்று அக்கட்டத்தை அடையவே செல்கின்றது என்று அவர் கூறினார்.* *(5 புள்ளி)*

*3) திருவழிபாட்டு ஆக்கங்கள்*

- *அறிவியல் ஆக்கங்கள்*
- *இறையியல் ஆக்கங்கள்*
- *மெய்யியல் ஆக்கம்*

*(மேற்குறிப்பிட்ட ஆக்கங்களில் அடங்கும் நூல்களும் குறிப்பிட்டு எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)*

*4)*

- *சிற்பக்கலையை கட்டிடங்களை அலங்கரிக்கும் கலையாகவே பயன்படுத்தினர்.*
- *கட்டிடக் கலையின் ஒரு பகுதியாகவே இது இருந்தது.ள*
- *கோதிக் ஆலயங்களின் கோபுர உச்சியை அலங்கரிப்பதற்கு வானதூதர்கள் புனிதரின் உருவங்கள், மிருக உருவங்கள் அமைக்கப்பட்டன.*
- *மழை நீரை வெளியேற்றும் பீலியாக மனிதனை அல்லது மிருகங்களின் வாய்களைப் பயன்படுத்தினார்.*
- *இயேசுவினதும் புனிதரினதும் உருவங்கள் கதவுகளைக் காவல் செய்யும் நோக்கத்துடன் செதுக்கப்பட்டிருந்தன.*
- *செபக்கூடங்களில் பழைய புதிய ஏற்பாடுகளின் கதைகளை வெளிப்படுத்தும் உருவங்கள் இருந்தன.* *(5 புள்ளி)*

*(5X4=20புள்ளிகள்)*

agaram.lk